1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலரிப்பைத் தடுக்கின்ற பணி என்பது நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார்கள். ஆகவேதான் புதிய முறையிலே கடலரிப்பைத் தடுப்பதற்கு–எண்ணூர் பகுதி தொழிற்சாலைகள் நிரம்பிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால்–இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அழைத்து இந்த யோசனையைத் தெரிவித்து இன்றைக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல சில பிரச்சினைகள் அங்கே இருந்தாலும் அதற்கான முழு ஆய்விலே நம்முடைய பொதுப்பணித் துறை பொறியாளர்களும் கட்டுமானக் கழகத்தினுடைய பொறியாளர்களும் ஈடுபட்டு இருக்கின்றார்கள். ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகளைப் பார்ப்பதற்காக அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குறைகள் களையப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 90, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

90-

கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணைக்கட்டுதல்:

* *11530*–**திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் தாலுகா, வடமட்டம் கிராமம் பாசனம் பெறும் வகையில் கீர்த்திமன்னார் ஆற்றின் குறுக்கே பெட்டேம் (Bed Dam) கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியில் 8 ஆண்டுகளுக்குப் பிறகு மேட்டூர் அணை நிரம்பி வழிந்து காலத்தோடு தண்ணீர் திறக்கப்பட்டு எங்களுடைய மாவட்டத்தில்

[1993 மார்ச் 16

விவசாயிகள் வயிற்றில் பாலை வார்த்திருக்கின்ற இந்த நல்ல தருணத்தில் இந்தப் பகுதியினுடைய விவசாயிகள் குறைகளைப் போக்குகின்ற வகையில், வருகின்ற ஆண்டிலாவது 'பெட்-டாம்' கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் குடவாசல் தாலூக்கா, வடமட்டம் கிராம பாசன வசதிக்கு கீர்த்திமன்னாற்றின் குறுக்கே ஒரு 'பெட்-டாம்' கட்டும் வேலை குறித்து ஆய்வு செய்யும்போது வடமட்டம் வாய்க்கால் அருகே கீர்த்திமன்னாற்றின் படுகை மட்டம் தாழ்ந்து உள்ளதால் வாய்க்காலில் போதுமான தண்ணீர் செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்று அறியப்பட்டது. எனவே, இவ்விடத்தில் படுக்கை அணை கட்டுவதற்குப் பதிலாக தரைமட்டத்தைப் பராமரித்தால் போதுமானது என்று பொறியாளர்களால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான மதிப்பீடு தஞ்சை மாவட்டக் கண்காணிப்புப் பொறியாளரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு நிதி ஆண்டில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 91, டாக்டர் மு. காளிராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

91-

மதுரை பெரியார் பேருந்து நிலையம் மற்றும் அரசு இராஜாஜி மருத்துவமனை அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம்

*9623-டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகிலும், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை அருகிலும் சுரங்கப்பாதை (நயுஸ-ஹிஹட்) அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,